**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 250/2019**

**வா.சா.1 – யசோதா**

**<u>20–06–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்து திருப்பூர் எம்.எஸ் நகரில் கதவு எண். 10/6ல் உள்ளது. தாவா சொத்தின் செக்குபந்தி எல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் ஆதியில் எனது தாத்தா அம்மாசை நாடாருக்கு பாத்தியப்பட்டது. அம்மாசை நாடாருக்கு சொத்து கிரைய வகையில் பாத்தியப்பட்டது. அந்த கிரையம் 1992ல் வாங்கப்பட்டு 1993ல் பதிவு செய்யப்பட்டது.

2. நானும் பிரதிவாதியும் கூட்டு குடும்பமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கூட்டு குடும்பமாக இருந்தபோது பயிர் செய்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தாவிற்கு வேறு வருமானம் இருந்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து கூட்டு குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. வா.சா.ஆ.2 மற்றும் 3ல் எனது தாத்தா பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் 3ல் பிதுராஜீயவகையில் வந்த வருமானத்தை வைத்து பாத்திப்பட்டதாக எழுதப்பட்டதா என்றால் எழுதவில்லை. கூட்டு குடும்பத்தில் வரும் வருமானத்தை வைத்துதான் சொத்து வாங்கியதாக சொல்லும் நான் கூட்டு குடும்பத்தில் உள்ளவர்களின் பெயர்கள் உள்ளதா என்றால் தாத்தா மூத்தவர் என்பதால் அவர் பெயரில் வாங்கப்பட்டது, மற்றவர்கள் பெயர்கள் இல்லை. கூட்டு குடும்ப நிதியில் இருந்து வாங்கப்பட்ட சொத்து என்று

சொல்லும் நான் தனிப்பட்ட நபரின் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் குறித்து ஆட்சேபணை தெரிவித்து அறிவிப்பு கொடுத்தேனா என்றால் எனக்கு சிறு வயது என்பதால் கொடுக்கவில்லை. எனக்கு விபரம் தெரிந்த பிறகும் அறிவிப்பு கொடுக்கவில்லை.

4. அதன் பிறகு எனது தாத்தா என்ன செய்தார் என்றால் எனது அப்பாவிற்கு உயில் எழுதிவைத்தார். உயில் எந்த மாதம் எழுதப்பட்டது என்றால் தெரியாது. பொதுவாக ஒருவர் உயில் எழுதிவைத்தால் எப்போது அமலுக்கு வரும் என்றால் 3 மாதத்தில் வரும். எனது தாத்தா தற்போது இறந்துவிட்டார். எனது தாத்தாவின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 உயில் சாசனம் கவுந்தப்பாடி பதிவு அலுவலகத்தில் எழுதப்பட்டது. தங்கமணி என்பவர் உயிலை எழுதினார். அதில் மேட்டுப்பாளையத்தை சேர்ந்த தர்மபூபதி எனபவர் சாட்சி கையொப்பம் செய்தார் மற்றொரு சாட்சியின் பெயர் தெரியாது.

(மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.